IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2023

Deposition of Witness for P.W.5

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.கணேசன் |
| FATHER NAME | - | திரு.ஜெயராமன் |
| VILLAGE | - | 151 ஏ, பலவன்சாத்து, துரைப்பாடி தொரப்பாடி வேலார் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | ஓய்வு |
| AGE | - | 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2025.

எதிரிகள் ஆஜர்.1 வது எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு

<u>முதல் விசாரணை–</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருக்கிறேன். 2019 லிருந்து வேலூர் ஆவின் பால்பண்ணையில் பாதுகாவலராக சில வருடங்கள் பணிபுரிந்தேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பாக 20.04.2019 ம் தேதி சுமார் இரவு 8 மணிக்கு மேல் நான் பாதுபாவலராக ஆவின் பால்பண்ணையில் பணியில் இருந்த போது மெயின் கேட்டு ஓரத்தில் ஒரு நபர் விழுந்து கிடந்தவரை ஒரு நபர் கட்டையால் அடித்துக் கொண்டிருந்தார். நான் சத்தம் போட்டேன். அடித்துக் கொண்டிருந்தவர் போகவில்லை. நான் விசில் எடுத்து ஊதினேன். 1வது எதிரி தவிர நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளை சாட்சி அடையாளம் தெரியாது என கூறுகிறார். அடித்துக் கொண்டிருந்த நபர் முகமூடி அணிந்திருந்தார்.(1வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மனு ஏற்பு). இரவு 12 மணிக்கு சத்துவாச்சாரி போலீசார்

ஜெ. கணேசன்

வந்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும் குமரனும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.1. பின்னர் சம்பவ இடத்தில் இருந்தது இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் தோய்ந்த சிமெண்ட் சாலை உடைத்த மண், அந்த இரத்தக் கறை பஞ்சில் துடைத்து சேகரித்து. கைப்பற்றுதல் மகசரில் என் முன்னிலையிலும் குமரேசன் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை-</u>

சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் 20 முதல் 25 வயது மதிக்கத்தக்க 3 பேர் வந்து கைகளில் கத்தி மற்றும் இரும்பு ராடை வைத்து இறந்த போன செல்வராஜ்-ஐ கத்தியால் , இரும்பு ராடால் மாறி மாறி கை , தலை, முகம் ஆகிய இடங்களில் வெட்டினார்கள் என்றும் தாக்கிய எதிரிகளை பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாக்கிய 3 நபர்களையும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது முகமூடி அணிந்து ஒரு நபர் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஜெ கணேசன்

குறுக்கு விசாரணை – எதிரிகள் தரப்பில்

அ.த.சா.ஆ.1 பார்வை மகசரில் போலீசார் என்னை விசாரித்ததை எழுதிக் கொண்டார்கள். அ.த.சா.ஆ.1 மற்றும் 2 பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் ஒரு நபரை ஆவின் பிரதான கேட்டு முன்பு கட்டையால் ஒரு நபர் அடித்துக் கொண்டிருந்தார் என்று சொல்லியுள்ளேன். அடித்துக் கொண்டிருந்த ஒரு நபர் முகமூடி அணிந்து கொண்டிருந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவ நடந்த சிறிது நேரத்தில் போலீசார் வந்து விட்டார்கள். போலீசார் அங்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் என் முன்னிலையில் இரத்தம் தோய்ந்த மற்றும் தோயாத மண் ஆகியவற்றை கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்னால் மாதிரி வரைபடம் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 11.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

11.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**